# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்**:165 **தேதி**:-30.04.2017

## மே தினக் கொண்டாட்டங்களும் ஒரு சில மத்திய சங்க செய்திகளும்

அன்பார்ந்த தோழர்களே,

இந்த ஆண்டு மே தினக் கொண்டாட்டங்களை கொடியேற்றி மிகச்சிறப்பாக கொண்டாடிடும் போதே கீழ்கண்ட பிரச்சனைகளையும் பிரதானமாக ஊழியர்கள் மத்தியில் கொண்டு சென்றிட வேண்டுமென நமது மத்திய சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

அ) BSNL உள்ளிட்ட பொது துறை நிறுவனங்களின் பங்கு விற்பனை/ கேந்திர பங்கு விற்பனை/ தனியார்மயமாக்கல் கூடாது. BSNLல் தனி துணை டவர் நிறுவனம் அமைக்கக் கூடாது.
ஆ) தொழிலாளர் நல சட்ட திருத்தங்களை திரும்ப பெறுக. உழைக்கும் வர்க்கம் போராடி பெற்ற தொழிற்சங்க உரிமைகளை பறிக்காதே.
இ) பேச்சுரிமையின் மீதான தாக்குதலை கைவிடு. நாட்டின் மதசார்பின்மையின் மீதான தாக்குதலை தடுத்து நிறுத்து.

மத்திய சங்கத்தின் அறைகூவலுக்கேற்ப இந்த மேதின விழாவை சிறப்பாக கொண்டாடிடுவோம்.

**BSNLஉடன் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வங்கிகள் அமலாக்க வேண்டும்:-** வங்கிகள் தங்களின் வட்டி விகிதங்களை குறைத்துள்ள சூழலில், BSNL ஊழியர்கள் தாங்கள் ஏற்கனவே வாங்கிய கடனில் மீதமிருக்கும் தொகையினை குறைந்த வட்டிக்கு மாற்ற விருப்பம் தெரிவிக்கின்றனர். ஆனால் அவ்வாறு மாறுவதற்கு பெரும் தொகையினை கட்ட வேண்டும் என வங்கிகள் தெரிவிக்கின்றன. உதாரணமாக மீதமுள்ள வீட்டு கடனுக்கான தொகை 10 லட்சத்தை குறைந்த வட்டிக்கு மாற்ற 8,000 ரூபாய் கட்ட வற்புறுத்தப் படுகின்றனர். இந்த பிரச்சனையை BSNL ஊழியர் சங்கம் நிர்வாகத்தின் கவனத்திற்கு முன்னரே கொண்டு சென்றுள்ளது. 28.04.2017 அன்று மீண்டும் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு GM(BFCI) திரு Y.N.சிங் அவர்களை சந்தித்து விவாதித்துள்ளார். புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் வங்கிகளின் ஒப்பந்தத்தை ரத்து செய்வது உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என BSNLஊழியர் சங்கம் கோரியுள்ளது. இதில் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள GM(BFCI) உறுதி அளித்துள்ளார்.

**GPFன் தற்போதைய நிலை:-** 28.04.2017 அன்று மீண்டும் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு GM(BFCI) திரு Y.N.சிங் அவர்களை சந்தித்து GPF தொடர்பாக விவாதித்தார்.

அ) பஞ்சாப், சட்டிஸ்கர் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களின் GPF பட்டுவாடாவை ஏப்ரல் மாதமே DOT எடுத்துக் கொண்டது.
ஆ) உத்தராகாண்ட், ம.பி, ராஜஸ்தான், அஸ்ஸாம், பீகார், ஜார்கண்ட், குஜராத், கொல்கொத்தா, டெலிகாம் ஸ்டோர்ஸ், டெலிகாம் ஃபேக்டரி, ETP, ETR, NE-1 மற்றும் NE-2 ஆகிய மாநிலங்களுக்கான GPF பட்டுவாடாவை மே மாதத்தில் இருந்து DOT வழங்கும்.
இ) இதர மாநிலங்களுக்கு GPF பட்டுவாடா செய்யும் பொறுப்பை இன்னமும் DOT ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் GPF பட்டுவாடாவிற்கான நிதியினை கார்ப்பரேட் அலுவலகமே வழங்கும்.

**7100லிருந்து 6550க்கு குறைக்கப்பட்ட Sr.TOA ஊதிய விகிதம்:-** Sr.TOAக்களுக்கு 7100 ஊதிய விகிதத்திலிருந்து 6550 க்கு குறைக்கப்பட்ட அநீதியை களைய BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து முயற்சித்து வருகிறது. இந்த குறைப்பு நியாயமற்றது, தீர்வு கணப்பட இயலும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து நிர்வாகத்திடம் வாதிட்டு வருகிறது. சமீபத்தில் நமது மத்திய சங்கம் வழங்கிய கடிதங்களின் அடிப்படையில் இது தொடர்பாக ஒரு புதிய விவாதத்தினை நடத்திட நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது. 28.04.2017 அன்று நடைபெற்ற இந்த விவாதத்தில் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களும், DGM(Estt) திரு சிவ சங்கர் பிரசாத் அவர்களும் கலந்துக் கொண்டனர். இந்த பிரச்சனை தீர்விற்கான பல வழிமுறைகள் விவாதிக்கப்பட்டுள்ளன. முடிவு இன்னமும் எட்டப்படவில்லை. விவாதம் தொடரும். இந்த பிரச்சனையை தீர்வு காண்பதில் நமது மத்திய சங்கம் உறுதியாக உள்ளது.

**பணியில் உள்ள ஊழியர்களுக்கு இரவு நேர இலவச அழைப்பு வசதி:-** சந்தாதாரர்களுக்கு வழங்கப்பட்ட இரவு நேர இலவச அழைப்பு வசதியினை பணியில் உள்ள, பணி ஓய்வு பெற்ற BSNL ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து வற்புறுத்தி வந்தது. 2017, மார்ச் 9ஆம் தேதி ஓய்வூதியர்களுக்கு இந்த வசதியினை நிர்வாகம் வழங்கியது. இதற்காக நன்றி தெரிவித்த BSNL ஊழியர் சங்கம் இந்த வசதியினை பணியில் உள்ள ஊழியர்களுக்கும் உடனடியாக நீட்டிக்க வேண்டுமென வலியுறுத்தியது. இது தொடர்பாக CMD BSNL வரை விவாதிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இதுவரை தீர்வு காணப்படவில்லை. இந்த வசதி பணியில் உள்ள ஊழியர்களுக்கு நீட்டிப்பதை கால தாமதப்படுத்துவது, பணியாற்றும் ஊழியர்களை உற்சாகமிழக்கச் செய்யும் என சுட்டிக்காட்டி உடனடியாக இதற்கான உத்தரவினை வெளியிட வேண்டும் என மீண்டும் CMD அவர்களுக்கு ஒரு கடிதத்தின் 27.04.2017 அன்று நமது மத்திய சங்கம் எழுதியுள்ளது.

**35வது தேசிய கவுன்சில் கூட்டம்:-** 35வது தேசிய கவுன்சில் கூட்டம் 11.05.2017 அன்று நடைபெறும் என கார்ப்பரேட் அலுவலகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதனை ஒட்டி ஊழியர் தரப்புக் கூட்டம் 10.05.2017 அன்று மாலை 3 மணிக்கு தாதா கோஷ் பவனில் நடைபெற உள்ளது.

**பொதுத்துறை நிறுவன சங்கங்களின் கூட்டுக் குழுவின் செய்தி பத்திரிக்கை:-** அகில இந்திய அளவில் பொதுத்துறை நிறுவன தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழுவின் சார்பாக காலாண்டிற்கு ஒரு முறை ஒரு செய்தி பத்திரிக்கை கொண்டு வருவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன் மூன்று தோழர்கள் கொண்ட ஆசிரியர் குழுவில் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களும் ஒருவர். 28.04.2017 அன்று டெல்லி CITU அலுவலகத்தில் அதன் வெளியீட்டு விழா நடைபெற்றது. அதன் முதல் பிரதியை CITU வின் அகில இந்திய தலைவர் தோழர் K.ஹேமலதா வெளியிட CITU செயலாளர்களின் ஒருவரான தோழர் தேவ் ராய் பெற்றுக் கொண்டார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**